**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI**

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No. 113/2021 |
| Deposition Of Witness for | : | PW 11 |
| Name | : | திரு. டாக்டர். தர்மபிரகாஷ் |
| Father Name | : | திரு. ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd February 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி Video மூலமாக ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

நான் திருவண்ணாமலை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக குழந்தைகள் நல பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். நான் 2019 செப்டம்பர் மாதம் சிவகங்கை மாவட்டம் திருப்பத்துார் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்து வந்தேன். 11.09.2019ம் ஆண்டு இரவு 08.20 காளிதாஸ் S/o. வைரவசுந்தரம் இசைவேளாளர் தெரு, திருப்பத்துார் என்பவர் ஒரு நபரால் கல் மற்றும் பைப்பால் தாக்கியதாகவும் அவர் தலையில் காயம் ஏற்பட்டதாகவும் தொடர்ந்து 3 முறை வாந்தி ஏற்பட்டதாகவும் மயக்க நிலையில் இருந்ததாகவும் அவர் மனைவி பாண்டி செல்வி என்பவர் மருத்துவமனைக்கு கூட்டி வந்தார். நான் அவரை பரிசோதித்த போது அவரது தலையில் பெரிய வெட்டு காயம் 5 X 2 X 2 செ.மீ அளவில் இடது தலை பகுதியில் காயம் இருந்தது. சிறு சிறு வெட்டு காயங்கள் தலையின் நடுப்பகுதியில் இருந்தது. ஒவ்வொன்றும் 5 X 2 X 1 செ.மீ அளவில் இருந்தது. காதில் எதுவும் இரத்தம் வரவில்லை. உடம்பில் வேறு எந்த இடத்திலும் காயங்கள் இல்லை. சிகிச்சைக்கு வரும்போது காயம் பட்ட காளிதாஸ் சிறிது சுயநினைவுடன் இருந்தார். சிறிது நேரத்தில் சுய நினைவை இழந்துவிட்டார். அவரை பரிசோதித்த போது மூச்சுவிடும் திறன் அதிகமாக இருந்தது. General condition மோசமான நிலைமையில் இருந்தது. அவரது இரத்த அழுத்தம் 160/100 என இருந்தது. இரத்த சர்க்கரை அளவு 171 என இருந்தது. நான் அவருக்கு மூக்கு வழியாக tube செலுத்தினேன். இரத்த அளவை சீரக்குவதற்காக குளுக்கோஸ் ஏற்றினேன். வலி நிவாரணி வாந்தி வராமல் இருப்பதற்காக ஊசியை செலுத்தினேன். அவருக்கு CT Scan எடுக்க வேண்டும் என்பதால் நரம்பியல் துறை மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டி இருந்ததாலும் 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் அதே நபரால் தாக்கப்பட்டதாக காயம்பட்ட காளிதாஸ் மனைவி பாண்டிசெல்வியும் அதே தேதியில் அதே நேரத்தில் அதே முகவரியை சேர்ந்த மேற்படியாரும் சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு தலையிலும் இடது முழங்கையிலும் அடிபட்ட இடத்தில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது, அவர் சுய நினைவுடன் தான் இருந்தார். அவருக்கு காதில் இருந்த ரத்தம் வரவில்லை. அவருக்கு ஏற்பட்ட தலை காயமும் 7 X 2 X 2 செ.மீ வெட்டு காயம் இடது தலை பகுதியில் இருந்தது. இடது பக்க முழங்கையில் 6 X 5 செ.மீ வீக்கக்காயம் இருந்தது. அவருக்கு வலி நிவாரணி TT ஊசி செலுத்திவிட்டு நரம்பியல் மருத்துவரின் ஆலோசனை பெற வேண்டியும் CT Scan எடுப்பதற்காகவும் மேல்

சிகிச்சைக்காகவும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். காளிதாஸ்க்கு உண்டான விபத்து பதிவேடு அ.சா.ஆ. 7. பாண்டிசெல்விக்கான விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எந்த ஆண்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் பணியாற்றினேன் என்றால் 2019ம் வருடம். என்னிடம் சிகிச்சைக்கு வந்த காளிதாஸ் 3 முறை வாந்தி எடுத்தாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சிகிச்சைக்காக வந்த காயம்பட்ட நபர்கள் தங்களை கல்லாலும் பைப்பாலும் தாக்ககியதாக குறிப்பிட்டுள்ளேன். போலீஸார் விசாரணையில் இனம் தெரிந்த நபர் கம்பால் அடித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் காயம் பட்ட நபர்கள் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது சொன்ன விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போன்று எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அவ்வாறு நடைபெற்று இருந்தால் கல்லையும் பைப்யும் சான்று பொருளாக தாக்கல் செய்து இருப்பார் என்றால் சரியல்ல. பாண்டிசெல்விக்கு ஏற்பட்ட காயத்திற்கு குறிப்பாக யார் காரணம் என்பது குறித்து போலீஸார் விசாரணையின் போது நான் குறிப்பிட்டு விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட மேற்சொன்ன நபர்களுக்கான காயம் ஆனது 2 நபர்கள் சண்டையிட்டு கொண்டு கீழே விழும் போது கல்லில் அடிபடும் போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. காளிதாஸ்க்கு ஏற்பட்ட காயத்திற்கு குறிப்பாக யார் காரணம் என்பது குறித்து போலீஸார் விசாரணையின் போது நான் குறிப்பிட்டு விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2026.02.03 15:36:29 +0530